IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# வள்ளலார் பின்பற்றிய அகப்பொருள் மரபுகள்



இரா. சேகர்.
பகுதி நேர ஆய்வாளர்
அரசு நந்தனம் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
நந்தனம், சென்னை-49.
பணி : உதவிப்பேராசிரியர்
செயின்ட் ஜோசப் கல்லூரி கலை மற்றும் அறிவியல் கோவூர் ,
சென்னை- 128.

முன்னுரை :

தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய புலமைமிக்க ஆளுமைகளுள் கவனிக்கத்தக்கவர் வள்ளலாராகிய இராமலிங்க அடிகளார் ஆவார். தனக்கு முன்பான தமிழ் பக்தி இலக்கியம் தத்துவ மரபு சமய பூசல் மற்றும் இறை கொள்கை கருத்தாடல் கிறிஸ்தவ சமயத்தின் செல்வாக்கு முதலான பல்வேறு சூழல்களை எதிர்கொண்டு பல்துறை புலவராக விளங்கிய ஒருவர்தான் வள்ளலார். அருட்பெருஞ்சோதியாக இறைவனைக் கண்டவர். தனக்கென தனித்த இறைக்கொள்கை கொண்டு வாழ்ந்தவர் இவர் பாடிய பாடல்களைத் தொகுத்து திருவருட் பா என்ற நூலாக வெளியிடப்பட்டுள்ளது. வள்ளலார் பாடல்களில் பல்வேறு பாடுபொருளும் மரபுகளும் பின்பற்றப்பட்டுள்ளன. இவர் இறைவனிடம் செலுத்தும் பக்தி முறைகளில் அகப்பொருள் சார்ந்த மரபுகளைப் பின்பற்றி நாயகன் நாயகி பாவனைப் போன்ற முறைகளிலும் பாடியுள்ளார். அந்த வகையில் வள்ளலார் பின்பற்றிய அகப்பொருள் மரபுகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

ஆய்வுச் சுருக்கம்

வள்ளலார் தமிழ் பாரம்பரிய அகப்பொருள் மரபுகளைப் பயன்படுத்தி, உலகியல் காதலை ஆன்மீகக் காதலாகவும், மனித அன்பை ஆன்மநேய ஒருமைப்பாடாகும் உயர்த்தி காட்டுவதையும், அகப்பொருள் பாடல்கள் வெறும் காதல் உணர்வுகளை மட்டும் பேசவில்லை, அவை ஆன்மா இறைவனை அடையத் துடிக்கும் தீவிரமான பக்தியையும் அதன் அனுபவத்தின் உச்சகட்ட உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. வள்ளலார் அகப்பொருள்

மரபுகளைப் பின்பற்றி இருந்தாலும், அதை தனக்கே உரிய சுத்த சன்மார்க்க நெறியுடன் இணைத்து பயன்படுத்தி உள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறது.

திறவுச் சொற்கள்

அகப்பொருள் மரபுகள், வள்ளலார், கைக்கோள், மானுடப் பெண், அலங்கல்

தமிழ் இலக்கண மரபுகள்:

தமிழ் மொழிக்கான இலக்கண மரபு என்பது தொல்காப்பியத்தில் தொடங்கி விரிவடைகிறது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண மரபினை உடையது, தமிழ் மொழி இலக்கணம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருள் அதிகாரம் என மூன்று பிரிவுகளைக் குறிப்பிட்டாலும், அவற்றுள் பொருளதிகாரத்தில் யாப்பும் உவமையும் விளக்குமிடத்தே, யாப்பிலக்கணமும் அணி இலக்கணமும் பேசப்படுவது கவனிக்கத்தக்கதாகும். பொருள் இலக்கணம் "அறம் பொருள் இன்பமும் அவற்றது நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடு பேறுமாம்பொருளென பொருளினைப் பொதுப்படக் கூறவே அவற்றின் பகுதியாகிய முதல், கரு உரியும் காட்சி பொருளும் கருத்துப் பொருளும் அகத்திணைக்கண் இன்பமும் புறத்திணைக்கண் ஒழிந்த மூன்று பொருளும் உணர்த்தும்[1] என்று விளக்கும் நச்சினார்க்கினியரின் கருத்து நோக்கத்தக்கதாகும்.

பொருள் இலக்கணம்

அகம், புறம் என இரண்டாகும் . நூற் பயனான அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களையும் கொண்டது பொருள் இலக்கணம். அதில், அகப்பொருள் இலக்கணம் இன்பத்தையும் புறப்பொருள் இலக்கணம் அறம், பொருள், வீடு எனும் மூன்றையும் பெற வைப்பது.

அகப்பொருளும் திணையும்:

அகப்பொருள்' என்பது "அகப் பொருளாவது போக நுகற்சியாகலான் அதனானாய பயன் தானே அறிதலின் அகம்[2] என்று விளக்குவார் இளம் பூரணர்.

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் நுகரும் உடல் இன்பமே அகம் என்கிறார். அத்தகைய அகப்பொருளை திணை நிலம் வழி விளக்குகிறார், தொல்காப்பியர்.

"கைக்கிளை முதலாய் பெருதிணை இறுவாய் முற்படக்கிளந்த எழுதிணை என்ப "[3]

என்று அகத்திணை ஏழினைக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். அவை மூன்று பகுப்பினை உடையன.

1. அன்பின் ஐந்திணை (அவை:குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)
2. கைக்கிளை - ஒருதலை காமம்
3. பெருந்திணை - பொருந்தா காமம்

திணை என்பது ஒழுக்கம் நிலம் இடம் என்கின்ற பல நிலைப்பொருளை கொண்டு இருப்பதாக திவாகர நிகண்டு கூறுகிறது. அன்பின் ஐந்திணைக்கு உரிய பொருள்கள் மூன்று. அவை:

1. முதற்பொருள்.
2. கருப்பொருள்.
3. உரிப்பொருள்.

முதற்பொருள்: நிலமும் பொழுதும் ஆகும்.

கருப்பொருள்: தெய்வ முதலாக தொழில் ஈறாக கூறப்படும் 14ம் கருப்பொருள் ஆகும்.

உரிப்பொருள்: என்பது ஒழுக்கம். ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய ஒழுக்கங்கள்:

1. குறிஞ்சி - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.
2. முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.
3. மருதம் - ஊடலும்ஊடல் நிமித்தமும்.
4. நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்.
5. பாலை - பிரிதலும்பிரிதல் நிமித்தமும்.

இவை அகப்பொருளுக்கு முக்கியமானதாக இருக்கின்றது.

“முதல் கரு உரிப்பொருளென்ற மூன்றே நுவலும் காலை முறை சிறந்தனவே பாடலுள் பயில்கின்றவை நாடும் காலை”[4]

என்பன அம்முப்பொருள் என்பதை தொல்காப்பியரின் வழி அறிய முடிகிறது.

கைக்கோள்:

‘கைக்கோள்’ என்பது ஒழுக்கத்தை கடைபிடித்தல் எனப்படுகிறது.

கூற்று

'கூற்று' என்பது அகப்பொருள் மாந்தர்கள் களவிலும் கற்பிலும் எந்த சூழலிலும் என்னவெல்லாம் பேசுபவர் என்பதை விளக்குவதே ஆகும். 'கேட்போர்' என்பது இன்னார் கூற இன்னார் கேட்டு அறிந்ததைக் கூறுவதாகும்.

அன்பின் ஐந்திணைக்குரிய கைக்கோள் இருவகையாக அறியப்படுகிறது. அவை: 1.களவு 2.கற்பு என்பதாகும். களவு என்பது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் கண்டு ஒழுகும் ஒழுக்கமாகும். அகத்திணை வழக்கத்தில் முதலில் நிகழ்வது களவு ஆகும். கற்பு என்பது தலைவனும் தலைவியும் திருமணத்தைச் செய்து கொண்டு வாழும் வாழ்க்கை நிலையாகும். இவ்வாறு இருநிலைபட்ட அக வாழ்வியல் முறையினை விளக்கும் இலக்கண மரபைப் பெற்றது தமிழ் மரபாகும். சங்க இலக்கியம் தொடங்கிய அக இலக்கிய மரபு என்பது காலத்திற்குக் காலம் மாறுபட்டு வந்திருக்கின்றது. அம்மரபு வள்ளலார் காலம் வரை எவ்வாறு வளர்ந்து வந்தது என்று ஆராயப்படுவது தேவையாகிறது.

சகமுதல் புறப்புறம் தங்கிய அகப்புறம்
அகம்புறம் முற்றுமாம் அருட்பெருஞ் ஜோதி [5]

உலகனைத்துக்கும் அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எனவுள்ள பக்கம் எங்கும் தங்கி நிறைந்திருப்பது அருட்பெருஞ் சோதி. உலகிற் பொருள்கள் எல்லாவற்றிற்கும் அகம் எனவும் புறம் எனவும், அகமும் புறமும் ஒட்டிய அகப்புறமும் புறப்புறமும் எனப் பக்கக் கூறுகள் காணப்படுவதுண்டாகலின் அவையெல்லாம் அடங்க, "புறப்புறம், அகப்புறம், அகம், புறம்" எனவுரைக்கின்றார். பக்கக் கூறுகள் எங்கும் தங்குதலாலும், அவற்றுள் குறைவற நிறைதலாலும் இறைவனைத் "தாங்கிய" எனவும், "முற்றுமாம்" எனவும் விதந்து கூறுகின்றார். அருட்பெருஞ் சோதி யுருவினனாதல் பற்றி, "அருட் பெருஞ் சோதி" எனக் குறித்தருளுகின்றார்.

அகப்பொருள் மரபும் வள்ளலாரும்:

அக இலக்கிய மரபு தொடர்ந்து தொழில்பட்டு இருப்பினும் அதில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த வகையில் வள்ளலாரின் திருவருட்பாவின் படி அறியவரும் அகப்பொருள் குறித்து அறிவது தேவையாகிறது. கந்தசாமி பிள்ளைக்கு அடுத்த நிலையில் வள்ளலாரின் பாடல்களை ஆய்வு நிகழ்த்தியவர்களில் ஊரன் அடிகள் முக்கியமானவர் ஆவார். வள்ளலாரின் வரலாற்றை விளக்கும் அவரது நூலிலேயே திருவருட்பா பாடல்கள் எத்தன்மையென என்பதை விளக்குகிறார்.

"சீர்ரீரார் வளம் சேர் ஒற்றிநகர் தியாகராசப் பெருமானைபாடும் வள்ளலார் தியாகராச பெருமானைத் தலைவனாகவும் தம்மை தலைவியாகவும் கொண்டு அகப்பொருள் சுவை ததும்ப பாடிய பாடல்களும் பதிகங்களும் பல. மூன்றாம் திருமுறையின் - 19 பதிகங்களும் அகப்பொருள் பாடல்களே"[6] எனும் ஊரான் அடிகள், வள்ளலாரின் மூன்றாம் திருமுறையில் உள்ள பாடல்கள் அனைத்தும் அகப்பொருள் மரபுடையது என்கிறார்.

களவும் கற்பும்:

வள்ளலார் பாடிய அருள் விளக்க மாலையில் இரண்டாம் பாடலாக அமைந்த,

“கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே! நிழல்கணிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே!
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே!”-[7]

என்ற பாடலில் விளையாடும் இளம் பருவத்திலேயே என்னை மணந்து கொண்ட அதாவது திருமணம் செய்து கொண்ட மணமகனே என்று தன்னை ஏற்றுக்கொண்ட தலைவனாக வள்ளலார் குறிப்பிடுகின்றார். இப்பாடலில் தன்னை தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் பாவித்து, விளையாடும் இளம்பருவ வயதிலேயே என் மனதைக் கவர்ந்து ஏற்றுக் கொண்ட தலைவா! அல்லது காதலனே என்று கூறும்போது அகப்பொருள் மரபு கூறாகிய களவும் கற்பும் கையாண்டு உள்ளதை அறிய முடிகிறது. மேலும் குளிர்ந்த மரமாக, மரம் தரும் நிழலாக, கனியாக காற்றாக நீராக மலராக மணமாக என்று பல வடிவங்களில் இன்பம் தரும் பொருளாக காண்கிறார். இது 'ஆக்கம் செப்பல்', 'நாணும் வரை இரத்தல்', 'நோக்குவை எல்லாம் அவையே போறல்', என்று தொல்காப்பிய நூற்பா உரைப்பது போல இறைவன் மேல் காதல் கொண்ட தலைவியாகிய வள்ளலார்க்கு பார்க்கும் பொருளெல்லாம் நோக்கும் பொருளெல்லாம் இறைவனாகிய தலைவனாகவே தோன்றுவதை அறிய முடிகிறது. இவ்விடத்தை தொல்காப்பியர் குறிப்பிடும் அகப்பொருள் மரபை கையாண்டு உள்ளார் என்பது வெளிப்படுகிறது. மேலும் மூன்றாம் திருமுறையில்,

**என்னுயிரிற் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்**
**என்னிறைவன் பொதுவில்நடம் இயற்றுநட ராசன்**
**தன்னியறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்**
**தன்னையன்றி பருவத்தே என்னையறிய விரும்பான்**[8]

என்று கூறுகின்ற போது, சிறு வயதிலேயே தன் காதலை ஏற்றுக் கொண்ட அரசனே! என்று அவர் தம் இறைவன் தன் காதலை ஏற்றுக் கொண்டதை இங்கே குறிப்பிடுகிறார்.

தோழிக்கு தலைவி கூறும்போது,

“தன்தேகம் எனக்களித்தார் தம் அருளும் பொருளும் தம்மையும் இங்கெனக்களித்தார்.
என் உயிர் கலந்து நடத்திறைவர்.”[9]

இது தன்னைஆட்கொண்ட ஆருயிர் தலைவனின் அருளையும் பொருளையும் பெறுவதற்காக தன் உடலையும் மனதையும் தலைவனுக்காக

அர்ப்பணிப்பதைக் கூறுகிறது. இறைவனைத் தனது உடலிலும் உள்ளத்திலும் கலந்து விட்ட இன்பத்தை விவரிக்கிறது.

தலைவி, அவர் காலையிலேயே இங்கு வந்து அருள்வார் ஆதலினால் நம் மாளிகையை அலங்கரித்து வைப்பாயாக என தோழிக்கு தலைவி உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதில் தன் உடம்பையும் அருளும் பொருளையும் எனக்கு என் தலைவன் தந்துவிட்டார் எமை விட்டு பிரியாமல் என் உடம்பில் கலந்து விட்டார். அவர் காலையிலேயே இங்கு வருவார் ஆதலினால் மாளிகையை அலங்கரித்து வைத்துவிடு சிறிதும் சந்தேகம்படாதே என தலைவன் வருவது உறுதியென தலைவி தோழியிடம் கூறுகிறாள். தலைவியின் தலைவனை எதிர்பார்க்கும் ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். இவ்விடத்தே அகப்பொருள் மரபு பக்தியில் பயன்படுத்தி இருப்பதை அறிய முடிகிறது.

ஊடலும் கூடலும் அதனால் வரும் இன்பமும், அவர் வழி விதும்பல் கூடல் எத்தனை சிறப்பும் இன்பமும் பழக்குமோ அதை காட்டிலும் பல மடங்கு இன்பம் ஊடலில் பிறப்பது என்பது அகப்பொருள் மரபு. வள்ளுவர் கூட தம் திருக்குறளில்,

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முழங்கப் பெறின்.[10]

என்று கூறுவர்.

மேலும், கூடிய தலைவன் வந்தால் நான் அவனோடு ஊடுவேனோ கூடு வேணுனோ அவனை தழுவேனோ என்று குறலில் பாடியுள்ளார் தன்னை அணைந்து கொள்ள இதோ வருகிறான் என்று கூறிச் சென்ற தலைவன் வந்துள்ளான் மீண்டும் அவனை போகவிட்டால், ஈடுஇணையற்ற தலைவனைத் தவிர யார் துணையாவார் என்று மனக் கோயிலில் சிறைப்படுத்துகிறாள். இதில் நீண்ட பிரிவுக்குப் பிறகு வரும் காதலரை கண்டதும் அவரை ஊடிக் கொள்ளலாமா அல்லது அவரை ஆவலோடு அனைத்து கொள்ளலாமா என்ற தவிப்பை குறள் வரிகள் உணர்த்துகின்றன.

வள்ளலார் சின்ன வயதில் என்னை சேர்ந்தார் புன்னகையோடு என்னை விட்டு இனி இவர் எப்படி போவது. ஓடு! இக்கதவை மூடு இரட்டைத்தாள்கோளைப் போடு என்று மனச்சிறையில் இறைவனாகிய தலைவனைத் தாழிடுகிறார்.

“ஊங்காரம் இரண்டுருவும் ஒன்றானோம்
ஆங்கே உறைந்த அனுபவம் நிறைந்த பெரு வெளியே.[11]

தனித்திரு அலங்கல், நற்றாய் கவன்றது என்னும் பதிகத்தில் வரத்தினால் தான் பெற்ற மகள் இறைவனே உன்னை அன்றி எதனையும் எண்ணியோ பேசியோ யான் அறியேன்! என் மகளின் தவறுகளையும் பொறுத்தருள்வீர் என்று பாடியுள்ளார். மேலும் திருவருட்பாவில் சல்லாப லஹறி, சல்லாப வியன்மொழி, பாங்கிமார் கன்னி , குறியிடம் துயித்தல், அனுபவமாலை, இங்கித மாலை , ஆற்றா விரதம், நாரை விடு தூது போன்ற பல தலைப்புகளில் தலைவி

கூற்றாகவும் அமைந்த பாடல்களில் தமிழ் அகப்பொருள் மரபுக் கூறுகளை வள்ளலார் கையாண்டுள்ளார் என்பது அறியப்படுகிறது.

முடிவுரை:

வள்ளலார் பாரம்பரிய அகப்பொருள் மரபுகளைப் பயன்படுத்தி உலகியல் காதலை ஆன்மீக காதலாகவும், மனித அன்பை ஆன்மநேய ஒருமைப்பாடாகவும் உயர்த்தி காட்டுவதை அறியலாம். இந்த அகப்பொருள் பாடல்கள் வெறும் காதல் உணர்வுகளை மட்டும் பேசவில்லை, அவை ஆன்மா இறைவனை அடைய துடிக்கும் தீவிரமான பக்தியையும், ஞான அனுபவ உச்சக்கட்ட உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் வள்ளலார் இந்த அகப்பொருள் மரபைத் தனக்கே உரிய சுத்த சன்மார்க்க நெறியுடன் இணைத்து பயன்படுத்தியுள்ளார் என்பதையும் இக்கட்டுரை புலப்படுத்துகிறது

சான்றெண் விளக்கம்


1. இராமலிங்க அடிகளார் வரலாறு, ஊரன்அடிகள் பக்கம் -60
2. தொல்காப்பியம், அகம் பொருள் நச்சினார்கினியர் உரை, பக்.78
3. தொல்காப்பியம், பொருள் இளம்பூரணர் உரை. பக்கம்-16
4. தொல்காப்பியம், அகம். நூற்பா.3
5. தொல்காப்பியம், அகம் நூற்பா.3-4
6. திருவருட்பா,பா.172
7. திருவருட்பா, ஆறாம் திருமுறை ப.249,
8. திருவருட்பா, மூன்றாம் திருமுறை ப.162
9. திருவருட்பா 5704
10. குறள் – 1330
11. திருவருட்பா, பாடல்.3


துணை நூல் பட்டியல்


1. தொல்காப்பியம் - நச்சினார்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை
2. தொல்காப்பியம் - இளம்பூரனர் உரை, கழக வெளியீடு, சென்னை
3. இராமலிஙக அடிகளார் வரலாறு - ஊரன் அடிகள்.
4. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா, வள்ளலார் பதிப்பகம், சென்னை-17
5. திருக்குறள் - மு.வ.உரை, கழக வெளியீடு, சென்னை